දුරකථන ) 2698475
தொலைபேசி )
Telephone ) 2698507

ෆැක්ස් ) 2692913
பெக்ஸ் ) 2694860
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

මගේ අංකය )
எனது இல )
My No. ) NCD/41/2011

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி )
Date ) 2013.11

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

பொது சுற்றறிக்கை இல:- 02-174/2013

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பன்முகப் படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்கள்,
போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்கள்,
தேசிய சுகாதர விஞ்ஞான நிறுவனப் பணிப்பாளர்,
வைத்திய அத்தியட்சகர்கள் / மாவட்ட வைத்திய அதிகாரிகள்
வைத்திய பொறுப்பதிகாரிகள்,
நிறுவனத் தலைவர்கள் அனைவருக்கும்,

**சுகாதாரப் பராமரிப்பு நிறுவனங்களில் தொற்றா நோய்களிற்கு சிகிச்சையளிப்பதன் பொருட்டு அத்தியாவசிய மருந்து மாத்திரைகளின் கிடைப்பனவை உறுதி செய்தல் தொடர்பான வழிகாட்டுகை.**

அத்தியாவசிய மருந்து மாத்திரைகளில் காணப்படும் பற்றாக்குறையானது, இலங்கையில் சுகாதார பராமரிப்பு நிறுவனங்களிற்கு சிகிச்சைக்காக வருபவர்களுக்கு சிறந்த பராமரிப்பு சேவையை வழங்குவதில் பாரியதொரு பின்னடைவாக இனங்காணப்பட்டுள்ளது.

சுகாதார பராமரிப்பு நிறுவனங்களில் ஆரோக்கிய வாழ்க்கை முறை நிலையங்களை (HLC) தாபிப்பதற்கான வழிகாட்டுகை பற்றிய 02-25/2013 எனும் இலக்கமுடைய 2013.01.15 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு மேலாக, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் உமது நிர்வாக அதிகார வரம்பின் கீழ் வரும் சகல நிறுவனங்களிலும் சகல இனம் காணப்பட்ட அத்தியாவசிய மருந்து மாத்திரைகள் (இணைப்பு 1), குளுக்கோ மீற்றர், குளுக்கோ மீற்றர் பரிசோதனைத் தாள்கள், கூர்மையான ஊசி (Lancets) உயரம் அளக்கும் உபகரணம்(Stediometers) , இரத்த அழுத்தமானி மற்றும் நிறையை அளவிடும் உபகரணம் (weighing scales) என்பன வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் இரண்டு மாதங்களுக்கு தேவையான அளவு இருப்புகள் இருப்பில் உள்ளன என்பதை உறுதிப்படுத்துமாறு நீர் வேண்டப்படுகின்றீர்.அவ்வாறே வருடாந்த மதிப்பீடுகளின் தேவைப்பாடுகளையும் உள்ளடக்குமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் அறியத்தரவும்.

மேலும், சுகாதாரப் பராமரிப்பு நிறுவனங்களில் சேவைகளை நாடிவரும் நோயாளிகள் மற்றும் சகல தரப்பினருக்கும் சிறந்த தொற்றா நோய் பராமரிப்பு சேவையை வழங்கும் வகையில் கிரமமான ஒரு அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மருந்துப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இருப்பில் இருப்பதை கண்காணிப்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

வைத்தியர்.பி.ஜி.மஹிபால
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

Dr. P. G. Mahipala
Director General of Health Services
Ministry of Health,
385, "Suwasiripaya",
Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.